# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. CC.110/2019**

**Deposition of Witness for Prosecution : PW10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **வெங்கடேசன்** | Caste | : | |
| Father/Husband Name | : | **மீனாட்சி சுந்தரம்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( accused present )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 26.02.2026**

**முதல் விசாரணை** :

நான் எழுமலையில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது மதுரை மாவட்ட தனி பிரிவு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.03.2019ம் தேதி டி. இராமநாதபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக இருந்தபோது உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த மாறப்ப ரெட்டியார் மகன் சின்னபாண்டி டி.ராமநாதபுரம் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து குற்ற எண் 20/2019 பிரிவுகள் 341,294(b), 323,324,506(ii) இதச படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் குமார், ராஜா ஆகியோர்கள் முன்னிலையில் விசாரணை செய்து பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி

வரைபடம் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் சின்னப்பாண்டி, பாண்டியம்மாள், மல்லிகா, பெருமாள், வேல், பாண்டியன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினமே 16.00 மணிக்கு எதிரியை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு ஒப்படைத்தேன். பின்னர் வழக்குகோப்பினை மேல்விசாரணைக்காக சார்புஆய்வாளர் பாக்கியமேரி அவர்களின் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

முதல்தகவல் அறிக்கை தகவலின் வகை எழுத்து மூலமாக கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் புகாரை வாக்குமூலமாக கொடுத்ததாக முதல் தகவல் அறிக்கை உள்ளே சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்கு இட பிரச்சனை இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 18.03.2019ம் தேதி சம்பவ நடந்த நேரத்தில் புகார்தாரர் மற்றும் அவரது மனைவியும் வண்டியில் எங்கு இருந்து எங்கு சென்று கொண்டிருந்தார்கள் என்று சொல்லப்படவில்லை மேலும் எந்த வண்டி என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எந்த முறையில் எதிரி வழிமறித்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதிரி கட்டையால் புகார்தாரரின் பின்கழுத்தில் ஓங்கி அடித்ததாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இடது நெஞ்சில் கையால் குத்தி தள்ளினார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கட்டையால் இடது காலில் மாறி மாறி அடித்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் 0.20கிலோ மீட்டர் தூரம் என்றால் சரிதான். புகார்தாரர்கள் சம்பவ இடத்தில் இருந்து மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் காவல் நிலையத்தை

தாண்டி தான் வரவேண்டும் என்றால் சரிதான். புகார்தாரர் மேற்படி எதிரியின் மீது இதற்கு முன்பு ஏதேனும் புகார் கொடுத்து மனு ரசீது கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகே பெருமாள் என்பவர் வீடு குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரரின் மாமியாருக்கும் எதிரிக்கும் இடபிரச்சனை சம்பந்தமாக மனு விசாரணை DRO நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது என்றும், மேற்படி நிலத்திலுள்ள வீட்டை அபகரிப்பதற்காக புகார்தாரர் எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் கொடுத்த புகாரை நான் சரியாக விசாரணை செய்யாமலும் சம்பவ இடத்திற்கு செல்லாமலும் ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றும் எதிரிமீது தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால சரியல்ல.